# டுவென்டியர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண். 67, பழைய எண். 28–ஏ,
கதவு எண். G–3, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.
TELEPHONE +91 44 24330006, FAX +91 44 24328252
WEBSITE: www.tcms.bz ; e-mail: Invesotrs@tcms.bz CIN: L74210TN1986PLC012791

## 33வது வருடாந்திர பொதுக்கூட்டம்– வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் பற்றிய அறிவிப்பு

**33வது வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் அடங்கியுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் 33வது வருடாந்திர பொதுக்கூட்டம் திங்கட்கிழமை, 15 ஜூலை 2019 அன்று மாலை 4.00 மணிக்கு ஆஷா நிவாஸ், எண். 9, ரட்லண்ட் கேட் 5வது தெரு, சென்னை–600 006ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91ன்படி, வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதை யொட்டி கம்பெனி உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் சனிக்கிழமை, 6 ஜூலை 2019 முதல் திங்கட்கிழமை, 15 ஜூலை 2019 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும் என்று மேலும் அறிவிக்கப்படுகிறது.**

கம்பெனியின் 33வது ஆண்டறிக்கை மற்றும் 33வது வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு, வருகை சீட்டு மற்றும் பதிலி படிவம் ஆகியவை கம்பெனியின் உறுப்பினர்களுக்கு தபால்/இமெயில் மூலமாக அவர்களின் முகவரிக்கு/ பதிவாளர்/டெபாசிட்டரிகளிடம் பதிவு செய்த இமெயில் ஐடி முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் எந்த முறையில் அனுப்ப வேண்டும் என்று கோரியிருந்தார்களோ மேற்சொன்ன முறையில் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களை https://instavote.linkintime.co.in or www.tcms.bz.லிருந்து படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 விதி 44 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 விதி 20ன்படி, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்கான வசதியை கம்பெனி அளிக்கிறது.கட் ஆப் தேதியான 8 ஜூலை 2019 அன்று காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் தவிர வேறு இடத்தில் இருந்தால் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) 33வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மீது லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் (எல்ஐஐபிஎல்) மூலமாக அளிக்கப்படும் மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்யலாம்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பதாவது:–

I. 33வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மின்னணு வாக்குப்பதிவின் மூலமாக செயல்படுத்தப்படும்.

II. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 12 ஜூலை 2019 அன்று (காலை 9 மணி) தொடங்குகிறது.

III. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 14 ஜூலை 2019 அன்று (மாலை 5.00) முடிவடைகிறது.

IV. மின்னணு வாக்குப்பதிவுக்கு தகுதி உடையவர்களை தீர்மானிக்க கட் ஆப் தேதியாக வியாழக்கிழமை, 8 ஜூலை 2019 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினர்களானவர்கள் மற்றும் கட் ஆப் தேதியான வியாழக்கிழமை, 8 ஜூலை 2019 அன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் https://instavote.linkintime.co.inக்கு கோரிக்கை விடுத்து லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக எல்ஐஐபிஎல்–லில் ஏற்கனவே பதிவு செய்திருந்தால் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிப்பதற்கு பயன்படுத்தலாம்.

V. உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது:

a. ஞாயிற்றுக்கிழமை, 14 ஜூலை 2019 அன்று மாலை 5.00 மணிக்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை எல்ஐஐபிஎல் செயலிழக்க செய்துவிடும் மற்றும் உறுப்பினர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்துவிட்டால் அதனை பின்னர் மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

b. வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி செய்யப்படும்.

c. வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை செய்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகலாம். ஆனால் மறுபடியும் வாக்களிக்க உரிமை கிடையாது.

d. கட்ஆப் தேதியன்று உறுப்பினர் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் உள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை பெறலாம் அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்கலாம்.

VI. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் மற்றும் வாக்குப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற Ms. லட்சுமி சுப்ரமணியன், சீனியர் பார்ட்னர், M/s. லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், ""முருகேச நாயக்கர் காம்ப்ளக்ஸ், எண். 81, கிரீம்ஸ் சாலை, சென்னை–600 006 அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.

**ஏதேனும் சந்தேகம் இருப்பின், அது குறித்து உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை அணுகலாம் மற்றும் படியிறக்க பிரிவு** https://instavote.linkintime.co.in **ல் உள்ள உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம் அல்லது** LIIPL at Tel: 022 – 49186000**ல் அணுகலாம் அல்லது** enotices@linkintime.co.in.**க்கு இமெயில் அனுப்பலாம்.**

VII. 33வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தனக்கு பதிலாக பதிலியை நியமனம் செய்து வாக்களிக்கலாம். பதிலி கம்பெனியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலிக்கான படிவங்களை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கம்பெனியின் 33வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரம் முன்னதாக கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். வாக்களிக்கும் உரிமையுடன் கம்பெனியின் மொத்த பங்கு மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கு மிகாமல் மற்றும் 50 பங்கிற்கு மிகாமல் வைத்துள்ள உறுப்பினருக்கு ஒரு நபர் பதிலியாக இருக்கலாம். வாக்களிக்கும் உரிமையுடன் கம்பெனியின் மொத்த பங்கு மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கு அதிகமான பங்குகளை வைத்துள்ள உறுப்பினர் ஒரு நபரை பதிலியாக நியமனம் செய்யலாம் ஆனால் அந்த நபர் பங்குதாரர் அல்லது இதர நபர் எவருக்கும் பதிலியாக இருக்கக்கூடாது.

குழுவின் ஆணைப்படி
ஏ.வி.எம். சுந்தரம்
கம்பெனி செயலாளர்

இடம் : மும்பை
தேதி: 18 ஜூன் 2019